அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 6/93

எனது இல.
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு. 07
1993, ஏப்ரல் மாதம் 15 ஆந் திகதி.

எல்லாச் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

## ஒழுக்காற்று விசாரணைகளுக்கான கொடுப்பனவு

இது தொடர்பாக 1986 டிசம்பர் 04ஆந் திகதி 355ஆம் இலக்கமுள்ள அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள கொடுப்பனவுகள் 1993.01.01ஆந் திகதி தொடக்கம் கீழ்வருமாறு அமையும்.

| ஒழுக்காற்று விசாரணை நடாத்துதல் | | எழுதுநர்/தட்டெழுத்தாளர் ~~எண்ணிக்கை ...~~ மற்றும் செலவிட்ட தபாற் கட்டணங்களை மீள் நிரப்பு செய்தல் | இறுதி அறிக்கையைத் தயார் செய்தல் |
|---|---|---|---|
| (1) விசாரணை நடத்தும் உத்தியோகத்தர் | | | |
| (அ) ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் | மணித்தியாலயமொன்றுக்கு ரூபா. 75/-படி | விசாரணையொன்றுக்கு ரூபா. 250/-படி | விசாரணையொன்றுக்கு ரூபா. 500/-படி |
| (ஆ) சேவையில் உள்ள உத்தியோகத்தர் | மணித்தியாலயமொன்றுக்கு ரூபா. 75/-படி | இல்லை | விசாரணையொன்றுக்கு ரூபா. 500/-படி |
| (2) முறைப்பாட்டினை வழி நடாத்தும் உத்தியோகத்தர் | மணித்தியாலயமொன்றுக்கு ரூபா. 55/-படி | இல்லை | இல்லை |

விசாரணைக் குறிப்புக்கள், இறுதி அறிக்கை என்பவற்றைத் தயார் செய்யும் பொருட்டுத் தட்டெழுத்துக் கடமையில் ஈடுபடும் தட்டெழுத்தாளரொருவருக்கு/ சுருக்கெழுத்தாளரொருவருக்கு 1992 மார்ச் மாதம் 05ஆந் திகதி 13/92ஆம் இலக்கமுள்ள அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கு இணங்கக் கொடுப்பனவு செய்ய வேண்டும்.

ஒப்பம்: எம். எச். ஜுனைட்.
செயலாளர்,
அரசாங்க நிருவாக, மாகாண சபைகள்,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.